# மியன்மார் அரசும் றொஹிங்ய முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்களும் - ஒரு வரலாற்றுப் பார்வை

பேராசிரியர் க.அருந்தவராஜா[1], மங்களரூபி சிவகுமார்[2]

[1] வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
[2] வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
arunn.msu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பொதுவாகவே அண்மைக்காலங்களில் ஆசியப் பிராந்தியத்தில் அதுவும் குறிப்பிட்ட சில நாடுகளில் சிறுபான்மையினமாக வாழுகின்ற முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனவாதத்தின் பின்னணியில் உருவான அடக்குமுறைகளின் உச்ச வெளிப்பாடுகளிலொன்றுதான் மியன்மாரில் றொஹிங்ய (Rohingya) முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனச்சுத்தீகரிப்பு நடவடிக்கையாகும். இன்று வரை பயங்கரவாதத்தினை அழிப்பது என்ற போர்வையில் மியன்மாரில் றொஹிங்ய முஸ்லிம்கள் துன்பப்படுத்தப்படுகின்றனரென்பது சர்வதேசங்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற வெளிப்படையானதொரு உண்மையாகக் காணப்படுகின்றது. அங்கு றொஹிங்யர்களுக்கு எதிராக 2017 இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட மோசமான இன ஒடுக்கு முறையான நடவடிக்கைகளின் பின்னணியில் அவர்கள் தமது உயிரையும் உடமைகளையும் இழந்து அனாதைகளாகி பங்களாதேஷ் போன்ற அயல் நாடுகளில் அடைக்கலம் தேடியுள்ளனர். பௌத்தமத நாடான மியன்மாரில் அங்குள்ள குறிக்கப்பட்ட மதப்பிரிவினைச் சேர்ந்த துறவிகள் சிலரும் தேசியவாதிகள் பலரும் றொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வருகின்ற கலகங்களில் பிரதான பங்கெடுத்து வருகின்றனர். காலணித்துவ ஆட்சியாளரான ஆங்கிலேயரது காலத்திலிருந்தே இவ்வின முஸ்லிம் மக்களுக்கு எதிரான உணர்வுகள் பெரும்பான்மையின பர்மியர்களிடம் இருந்து வருவதனை வரலாற்று ரீதியாக அவதானிக்க முடியும். இக் காலப்பகுதியே அதனது தொடக்க காலகமாகவும் உள்ளது. இதன் தொடர்ச்சியாகவே அண்மைக் காலங்களில் மியன்மாரில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக அந்நாட்டு அரசு எடுத்து வருகின்ற மோசமான நடவடிக்கைகள் அமைந்துள்ளன. மேலும் அவர்களுக்கு எதிராக அப்பகுதிகளில் வெடித்துள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதிலும்கூட பர்மிய அரசு அக்கறைகாட்டாத நிலையே காணப்படுகின்றது. இதனால் சர்வதேச அளவில் அந்நாட்டுக்கு எதிராகப் பல்வேறு கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இருப்பினும் அண்மைக்காலங்களில் முஸ்லிம்கள் மீதான வன்முறைச் சம்பங்கள் சர்வதேசங்களின் அழுத்தத்தின் பின்னணியில் ஓரளவு குறைந்துள்ளதென்றே சொல்ல வேண்டும். அதே நேரத்தில் முற்றாக முடிந்துவிட்டதென்றும் கூறமுடியாது. தற்போது பர்மிய அரசு புலம் பெயர்ந்த றொஹிங்ய அகதிகளை மீளவும் அழைப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் அமைப்பெற்ற இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் முதற்தர மற்றும் இரண்டாம்நிலை தரவுகள் என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. இவற்றில் நேர்காணல்கள், வினாக்கொத்துக்கள், அவதானிப்புக்கள், நூல்கள், பத்திரிகைகள், கட்டுரைகள் என்பன பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. மேலும் றொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின் பின்னணி, அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள், அதற்கு எதிராகச் சர்வதேசங்கள் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் போன்றவற்றினை வெளிக்கொணர்வதே ஆய்வினது பிரதான நோக்கங்களாக உள்ளன. எனவே இனவாதமும் மதவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு தேசத்தில் எப்போதும் கைவிடப்பட்டதொரு இனமாகவே சிறுபான்மையினம் இருக்குமென்பது வரலாறு கற்றுத் தருகின்ற பாடங்களிலொன்று. சர்வதேசங்கள் இவர்களது அழிவில் குளிர்காயுமென்பதே உண்மை.

**திறவுச் சொற்கள்:** இனச்சுத்தீகரிப்பு, சர்வதேசங்கள், றொஹிங்ய முஸ்லிம்கள், நாடற்றவர

## அறிமுகம்

சர்வதேசங்களது பார்வை அண்மைக்காலமாகத் திரும்பி வருகின்ற பிரதேசங்களிலொன்றாக இன்று மியன்மார் விளங்கி வருகின்றது. அங்கு நடைபெற்று பெற்று வருகின்ற இஸ்லாமிய மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் அநாகரிகமான செயல்களாகப் பார்க்கப்படுகின்றன. அந்நியரது ஆட்சிக்காலத்திலேயே இதற்கான விதை தூவப்பட்டுள்ளதாக வரலாறு கூறுகின்றது. அதன் தொடர்ச்சியே தற்போது அங்கு நடைபெற்று வருகின்ற நிகழ்வுகளாகும். இருப்பினும் தற்காலத்தில் மியன்மாரில் நடைபெற்று வருகின்ற இனமோதல்களின் பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையும் பிற

சில சர்வதேச அமைப்புக்களும் இப்பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் நடப்பதாக அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. குறிப்பாக பல இன, மதத்தவர்கள் வாழுகின்ற பிரதேசமாகக் காணப்படுகின்ற மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்களே அங்குள்ள தேசியவாதிகளின் இலக்காகக் காணப்படுகின்றனர். முற்குறிப்பிட்டவாறு ஆங்கிலேயரது காலத்திலேயே இதற்கான விதை தூவப்பட்டு இன்று இனச்சுத்தீகரிப்பென்ற பெரும் விருட்சமாக அவர்களுக்கு எதிராக மியன்மாரில் வளர்ச்சி கண்டுள்ளது. அங்குள்ள முஸ்லிம்களை அரசிற்கு எதிராக ஆயுதமேந்துமளவிற்கு மியன்மார் அரசின் ஒடுக்குமுறைகள் சென்றுள்ளன. பலர் அகதிகளாக அயல்நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் விவரணப் பகுப்பாய்வாக அமைப்பெற்ற இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் முதற்தர மற்றும் இரண்டாம்நிலை தரவுகள் என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. இவற்றில் நேர்காணல்கள், வினாக்கொத்துக்கள், அவதானிப்புக்கள், நூல்கள், பத்திரிகைகள், கட்டுரைகள் என்பன பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. மேலும் ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின் பின்னணி, அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள், அதற்கு எதிராகச் சர்வதேசங்கள் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் போன்றவற்றினை வெளிக்கொணர்வதே ஆய்வினது பிரதான நோக்கங்களாக உள்ளன. இப்பிரதேசத்து முஸ்லிம்களது நடைமுறைப் பிரச்சினை தொடர்பாக சமகாலத்தில் எவ்விதமான நூல்களும் வெளிவரவில்லை. இதனால் முன்னைய ஆய்வுகளென்பது சமகாலப் பத்திரிகைகள், இணையம் என்பனவற்றினை நம்பியதாகவே உள்ளது. எனவே இனவாதமும் மதவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு தேசத்தில் எப்போதும் கைவிடப்பட்டதொரு இனமாகவே சிறுபான்மையினம் இருக்குமென்பது வரலாறு கற்றுத் தருகின்ற பாடங்களிலொன்று.

**மியன்மார்**

தென்கிழக்காசிய நாடுகளிலொன்றாகக் காணப்படுகின்ற மியன்மார் நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியினைக்கொண்ட தேசமாக விளங்குகின்றது. சுமார் 11,000 வருடங்களுக்கு முன்பாகவே இங்கு ஹோமோசேப்பியன்ஸ் இனம் வாழ்ந்ததாகத் தொல்லியல் ஆதாரங்கள் மற்றும் குறிப்புக்களில் தகவல்கள் உள்ளன. தற்போது பங்களாதேஷ், சீனா, லாவோஸ், தாய்லாந்து என்பனவற்றினை எல்லைகளாகக் கொண்டு காணப்படுகின்ற பர்மா என ஆரம்பகாலங்களில் அழைக்கப்பட்டுவந்த இந்நாடானது 1989இன் பின்னராகவே மியன்மாரெனப் பெயர் மாற்றங் கண்டது. தற்காலத்தில் ஏறத்தாள 51 மில்லியன் மக்கள் தொகையினைக்கொண்டதாக மியன்மார் விளங்குகின்றது. நைப்பியித்தெள (Naypyidaw) தற்போது இதனது தலைநகரமாக இருந்து வருகின்றது. ரங்கூன் (Rangoon) என்பதே மியன்மாரது பழைய தலைநகரமாக நகராக இருந்தது.

19ஆம் நூற்றாண்டில் சுதேச ஆட்சியாளரிடமிருந்து இப்பகுதிகள் ஆங்கிலேயரினால் கைப்பற்றப்பட்டதனைத் தொடர்ந்து ஆங்கிலேயரது குடியேற்ற நாடுகளிலொன்றாக மாற்றங்கண்ட இந்நாடு 1948இல் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றது. (Trager,N.1966) இத்தேசத்தில் அடிக்கடி இடம்பெற்றுவந்த இனக்கலவரங்களின் பின்னணியில் ஒரு கட்டத்தில் சுமார் 3,00,000 இந்தியர்கள் எல்லாவற்றினையும் இழந்த நிலையில் வெளியேற வேண்டியிருந்தது. தனியாரிடமிருந்த நிலங்கள் தேசியமயமாக்கப்படுகின்றன எனக்கூறி இந்தியரிடமிருந்து அவை கொள்ளையடிக்கப்பட்டன. 2011இல் பெயரளவில் மக்கள் சார்ந்த அரசாங்கமொன்று மியன்மாரில் அமைந்தது. தொடர்ந்து ஆங் சான் சூயி (Aung San Suu Kyi) உள்ளிட்ட பல அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 2015இல் நடைபெற்ற தேர்தலில் இவர் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றமையினைத் தொடர்ந்து மியன்மாரில் இடம்பெற்றுவந்த இராணுவ ஆட்சி முடிவிற்கு வந்தது.

**றொஹிங்ய முஸ்லிம்கள்**

றொஹிங்ய முஸ்லிம் மக்கள் தனியே மியன்மாரில் மட்டும் வாழுகின்ற இனக்குழு அல்ல. அவ்வினக்குழு மியன்மார், பங்களாதேஷ், சவுதிஅரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மலேசியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா போன்ற பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தற்போது அகதி நிலையில் ஆசியாவினையும் தாண்டிப் பிற பகுதிகளிலும் வாழத் தலைப்படுகின்றார்கள். இவர்களது மதம் இஸ்லாம் என்பதுடன் பேசுகின்ற மொழியும் இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தினைச் சேர்ந்த றொஹிங்ய (Rohingya) என்பதாக உள்ளது. இவர்கள் தென்கிழக்காசியாவின் பழைய கடற்கரை நகரமான ரெக்கெய்ன் அல்லது அர்க்கான் (Arakan) என்பதன் பூர்வீகக் குடிகளாகக் கருதப்படுகின்றனர். கி.பி 8ஆம் நூற்றாண்டளவில் அராபிய வியாபாரிகள் பலர் வங்களாவிரிகுடாவின் மூலமாக இப்பகுதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். தொடர்ந்து இப்பகுதியில் அராபியர்கள் தமது மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். 9ஆம் நூற்றாண்டளவில் அராபிய வியாபாரிகளில் சிலர் உள்ளூர் பெண்களைத் திருமணம் செய்து மியன்மாரின் சில பகுதிகளில் நிரந்தரக் குடிகளாயினர். (Louis Allen.1934) இக்காலப்பகுதியிலிருந்துதான் றொஹிங்யர்கள் தொடர்பான வரலாறு அடையாளங் காணப்படுகின்றது.

அதேநேரத்தில் இவர்களது தோற்றந் தொடர்பாக ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களையும் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் வங்காளத்திலிருந்து வந்து குடியேறியவர்களெனவும் வேறு சிலர் 1948 பர்மிய விடுதலையின் பின்னரும் 1971இல் நடைபெற்ற வங்காள விடுதலைப் போரின் பின்னராகவும் வந்து குடியேறியவர்களாக இவர்களைக் கருதுகின்றனர். (தியாகராஜ்,க.ம.2009) அவ்வகையில் இவர்கள் வருகை தொடர்பாக இருவேறுபட்ட தன்மைகள் இருப்பதனைக் காணலாம். ஒன்று அவர்கள் மியன்மாரினது பூர்வீகக் குடிகளென்பது. இக்கருத்து றொஹிங்ய முஸ்லிம்களது கருத்து. மற்றையது பெரும்பான்மை மதவாதிகளது கருத்தான இவர்கள் வந்தேறு குடிகளென்பது. 1950இற்கு முன்னராக உள்ள எந்த ஒரு பர்மிய ஆவணங்களிலும் றொஹிங்ய என்ற சொல் இடம்பெறவில்லை. இதனால் இவர்கள் இடையில் வந்தவர்களெனக்கூறி சட்டவிரோதக் குடிகளாகப் பாவித்து இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் எல்லாவற்றினையும் மியன்மார் அரசு தற்போதுவரை தவிர்த்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**றொஹிங்ய முஸ்லிம்கள் மீதான வன்முறைகள்**

ரெக்கெய்ன் மாநிலத்தில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் ஏனைய மாநிலங்களில் வாழ்ந்து வருகின்ற மியன்மாரினது மக்கள் அனுபவிக்கின்ற வசதிகள் மற்றும் சலுகைகளை அனுபவிப்பதில்லை அல்லது குறைந்தளவிலேயே இவற்றினைப் பெறுகின்றனர். குறிப்பாக கல்வி, சுகாதார வசதிகள் மிகவும் மோசமான நிலையிலே இப்பகுதிகளில் காணப்படுகின்றன. இங்கு வாழுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் குறிப்பாக 80% இற்கும் அதிகமானவர்கள் கல்வியறிவற்ற பாமரர்களாகவே உள்ளனர். சர்வதேசங்களது உதவிகளும்கூட இவர்களைச் சென்றடைவதில்லை. இவையெல்லாம் திட்டமிடப்பட்டு றொஹிங்ய முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்படுகின்ற இனஅழிப்பினது அங்கமாகவே கொள்ளப்படுதல் வேண்டும். அந்நாட்டில் நூற்றுக்கும் அதிகமான இனங்கள் உள்ளபோதும் இவர்களை ஒரு இனமாகவே அந்நாட்டின் மத அடிப்படைவாதிகள் கருதுவதில்லை.(கஜமுகன்,2017ஒக்ரோபர்29) இவற்றின் வெளிப்பாடுகளிலொன்றுதான் தற்போதுவரை தொடர்ந்து வருகின்ற றொஹிங்ய முஸ்லிம்கள் மீதான மியன்மார் அரசினது அடக்குமுறையான கொள்கையாகும்.

மியன்மாரில் வேகம் குறைந்தளவில் நடைபெற்றுவந்த ரொஹிங்கிய முஸ்லிம்களின்மீதான வன்முறைகள் அண்மைக்காலங்களில் மிகவும் தீவிரமடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக அவர்கள் வாழ்ந்துவந்த கிராமங்களில் பல கடந்த ஆறு வருடங்களில் தீக்கிரையாக்கப்பட்டு அவர்கள் விரட்டப்பட்டிருந்தனர். அவர்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின்றிக் கைதுகளும் சிறைவைப்புக்களும் கொலைகளும் இடம்பெற்றுள்ளன. பாலியல் வன்புணர்வுகள் பல இடங்களிலும் நடந்தேறியுள்ளன. 2013 அளவில் அந்நாட்டின் இராணுவமும் காவல்துறையும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் எரிக்கப்பட்டனர். சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் உள்நாட்டிலும் அகதிகளாக்கப்பட்டு முகாம்களில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் எவையும் செய்துகொடுக்கப்படவில்லை. 2017இல் மக்கள் வெளி யேறியிருந்த கிராமங்களுக்குள் புகுந்த இராணுவம் அவற்றினை அழித்ததுடன் வெளியேறிய மற்றும் வெளியேறிக்கொண்டிருந்த மக்களையும் தாக்கியுள்ளது. (அனஸ்.எம்.எஸ்எம்.2017ஒக்ரோபர்14) இவ்வாறு சுற்றிவளைக்கின்ற இராணுவம் அத்தகைய சுற்றிவளைப்புக்களில் கைதாகின்ற மக்களைக் கொலை செய்தது. பத்திரிகையாளர்கள்கூட குறிக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்ற இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவ்வகையில் 2012\2013களில் மியன்மாரில் நடைபெற்ற கலவரமானது பல்வேறு முக்கியத்துவத்துனைப் பெற்ற கலவரமாகக் காணப்படுகின்றது. பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் இதன்போது பரவலாக மோதிக்கொண்டனர். இக்காலப்பகுதியிலிருந்து முஸ்லிம்களது வன்முறைகளின் பின்னணியிலேதான் மதகுருமார்களது நடவடிக்கைகள் வேகம்பெற ஆரம்பித்திருந்தன. அதனொரு தீவிரமான வடிவமாகவே 2017இல் நடைபெற்ற இனவெறித் தாக்குதல்கள் அமைந்தன. இனத்தினையும் மதத்தினையும் பாதுகாப்பதற்கான அமைப்பு (மாபாதா), தேசியவாதிகளின் இயக்கம் என்பன இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்ட அமைப்புக்களில் குறிப்பிடத்தக்கன.

**ஒடுக்குமுறைக்கான பின்னணி**

1962இலிருந்து மியன்மார் அரசு ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. அதாவது இவர்களை நாடற்ற மக்களாக்குதல், அவர்களது அடிப்படை உரிமைகளையும் வசதிகளையும் மறுப்பது என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கன. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேலைதேடி பெருமளவிலான மக்கள் இந்தியாவிலிருந்து மியன்மார் சென்றனர். அத்தருணத்தில் ரெக்கெய்ன் மாநிலத்தில் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது. அதாவது 58,255 இலிருந்து இக்காலமான 1891-1911 களுக்கிடையிலே 175,687ஆக அவர்களது தொகை உயர்ந்தது. (அனஸ்,எம்.எஸ்.எம்.2017ஒக்ரோபர்14) அந்நேரத்தில் கிழக்கிந்தியக் கம்பனியும் இரு நாடுகளுக்குமிடையிலே காணப்பட்ட எல்லையினைத் திறந்து இந்தியர்களது குடியேற்றத் தினை பர்மாவில் ஊக்குவித்திருந்தது.

ஆங்கிலேயரது காலத்தில் குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மியன்மார் இந்தியாவினது மாகாணங்களிலொன்றாகவே கருதப்பட்டது. அந்நாட்டினை வளம்படுத்துகின்ற நோக்கத்துடன் இந்தியர்கள் பலர் பர்மாவிற்குள் கொண்டுவரப்பட்டனர். அதேநேரத்தில் பர்மியர்கள் இவர்களால் தமது பொருளாதாரம் துடைத்தெடுக்கப்பட்டதாக எண்ணினர். இத்தகையதொரு பின்னணியிலேதான் அவர்களது இனவாதம் இந்தியர்களுக்கு எதிராக உருவெடுத்தது. இரண்டாம் உலகப்போரில் அரக்கன் மாநிலத்தில் இருந்தவர்கள் ஜப்பானோடும் இந்தியர்கள் பிரித்தானியருடனும் இணைந்தனர். இதில் இந்திய முஸ்லிம்களும் அடங்கியிருந்தனர். இதனால் முஸ்லிம்களுக்கு எதிராக 1942இலேயே வன்முறைகள் ஆரம்பித்திருந்தன.

மத ரீதியாகவும் மியன்மார் மக்களிடம் அச்சஉணர்வு இருந்துவந்தது. அதாவது ஒருகாலத்தில் மலாய், இந்தோனேஷியச் சமூகங்கள் பௌத்த மற்றும் இந்துத்தேசங்களாகவே இருந்துள்ளன. ஆனால் முஸ்லிம் வணிகர்களாலேயே அவை முஸ்லிம் நாடுகளாயின. எனவே தமது நாட்டிற்கும் இத்தகையதொரு நிலை ஏற்படலாமென்ற அச்சம் அவர்களிடம் குடிகொண்டிருந்தது. மேலும் முஸ்லிம் ஒருவர் மியன்மார் பெண்ணைத் திருமணம் செய்தால் அப்பெண் இஸ்லாமிய மதத்திற்கு மாறுதல் வேண்டும். அல்லாதுவிட்டால் அவருக்கு சொத்துக்கள் உள்ளிட்ட வாரிசுரிமை என்பவை கிடைக்காத நிலையே காணப்படும். எனவே இஸ்லாமிய மயமாக்கமென்பது மியன்மாரில் வருங்காலங்களில் ஏற்படலாமென்ற அச்சமும் முஸ்லிம்கள்மீதான ஒடுக்குமுறைகளுக்கான காரணங்களிலொன்று. அரசினது நவபாசிச, நவநாஜி தன்மையும் இந்தியர்கள் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக மிக ஆழமாக பர்மியரது மனதில் புதைந்திருக்கும் தவறான அபிப்பிராயங்களும் பொருளாதார ரீதியில் துன்பப்பட்ட நேரத்தில் தாம் பலிக்கடாக்களாக்கப்பட்டது என்ற எண்ணமும் இரண்டாம் உலகப்போருக்கு முன்பிருந்த இனவாதத் தூய்மை குறித்த கருத்தாக்கங்களும் சேர்ந்து அந்நாட்டில் பௌத்தம் ஒரு இனவாத கருத்தியலாகவே உருவாக்கப்பட்டுள்ளது.(செந்தில்நாதன்,ஆழி.2013)

பர்மாவில் தோன்றியிருந்த மதத்தீவிரவாத அமைப்பான 969 என்ற அமைப்புடன் இராணுவமும் இணைந்தே பர்மாவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளது. நடைபெற்ற தேர்தல்களில் இராணுவத்தினது ஆதரவிலான அமைப்பினர் தோல்வியினைச் சந்தித்து வந்துள்ளனர். இதனால் மக்களது ஆதரவினை வேறு விதங்களில் பெறும் பொருட்டு இவை இனவாத நடவடிக்கைகளில் இறங்கின. அந்தவகையில் மியன்மாரினையும் பௌத்தத்தினையும் முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்பதே இதனது பிரதான நோக்கங்களிலொன்றாக அமைந்திருந்தது. இதுபோன்று ஒரு சில மதவாத அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக பர்மாவில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வமைப்பினது பிரசாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் என்பன இனவாத தன்மைகள் கொண்டவைகளாக அமைந்திருந்தன. முஸ்லிம்களது வியாபார நிறுவனங்களைப் புறக்கணித்தல், அவர்களைச் சமூகத்திலிருந்து விலக்கி வைத்தல் என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கன. ஆரம்பகாலத்தலிருந்தே ஆங் சான் சூயிமீதும் இவ்வமைப்பினர் அவர் பணக்கார முஸ்லிம்களின் கையாள் என்ற குற்றச்சாட்டினை முன்வைத்து வந்தபோதும்கூட அக்காலத்தில் இடம்பெற்றுவந்த முஸ்லிம்கள்மீதான வன்முறைகளைக் காணாத ஒருவராகவே அவரும் இருந்து வந்தாரென்பதே உண்மை.

கி.பி.7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னதாக ரொஹிங்ய முஸ்லிம்கள் தமது வரலாற்றினை அடையாளப்படுத்தும் முயற்சியில் இறங்கினர். அவர்கள் தம்மைச் சுயநிர்ணய உரிமையினைக் கொண்ட சமூகமாக ஏற்றுக்கொள்ளுமாறு நீண்டகாலமாகக் கோரிக்கையினை முன்வைத்து வருகின்றனர். வரலாற்று ரீதியான இருப்பிடம், இன,மொழி அடையாளங்கள், பாரம்பரியங்கள், நாகரிகம் போன்ற தேசியப் பண்புகள் அவர்களிடம் இருப்பது எடுத்துக்காட்டப்பட்டது. நில ரீதியாக மற்றும் எல்லை ரீதியான வளங்களுக்கும் அவர்கள் உரிமை கொண்டாடினர். எனவே 1948இல் மியன்மார் சுதந்திரம் பெற்றதிலிருந்து இத்தகைய கனவானது வேகம் பெற ஆரம்பித்தது. (அனஸ்,எம்.எஸ்.எம். 2017ஒக்ரோபர்14) இக்காலத்திலிருந்தே புதியதாக அமைக்கப்பட்ட பர்மிய அரசானது ரொஹிங்ய முஸ்லிம்களை தேசிய இனமாக அங்கீகரிக்க மறுக்க ஆரம்பித்தது. 1978இல் இவர்கள் இராணுவத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். 1982இல் குடியுரிமைச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு ரொஹிங்யர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. (Hall D.G.E.1968) தொடர்ந்து கடவுச்சீட்டு பெறுதல் உள்ளிட்ட பல சிக்கல்களை அவர்கள் எதிர்நோக்கினர். இவர்களுக்கெனத் தனியான அடையாள அட்டை வழங்கப்பட்டதுடன் தமது பிரதேசங்களைவிட்டுப் பிற பகுதிகளுக்கு அவர்கள் செல்ல முடியாத சூழலும் காணப்பட்டது. இப்பின்னணியிலேதான் இவர்களால் மியன்மாரில்

வாழுகின்ற தேசம் முஸ்லிம் தேசமெனவும் அது மியன்மாருடைய மத்திய நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. இவ்விடயந் தொடர்பாகக் காலத்திற்குக் காலம் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் ரெக்கெய்ன் மாநிலத்தில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான மோதல்கள் அதிகரித்தன. ரொஹிங்ய முஸ்லிம்களின் மக்கள் தொகைப் பெருக்கமானது அதிகரித்துக கொண்டு வருவதாகவும் இவர்களது அதிகரிப்பானது பௌத்த குடித்தொகையிலும் அதிகமாக உள்ளது என்ற கருத்தினையும் தீவிரமான போக்குள்ள பௌத்த பிக்குகள் முன்வைத்து வந்தனர். இவர்களது பேச்சுக்கள் இனவாதத்தினை அதிகரிக்கின்ற விதத்தில் அமைந்திருந்தன. இந்நிலையில் நேரடியாக இல்லாதுவிட்டாலும் மறைமுகமாக இவர்களது கருத்தினை அமோதித்த வகையில் மியன்மார் அரசு முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டிவிட்டு முஸ்லிம்களது பிறப்பினைக் குறைப்பதற்கான சட்டங்களை அவர்கள்மீது திணித்து வந்தது. இறுதியில் அவர்கள் நாடற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக 1948இன் பின்பாக நாட்டில் இயற்றப்பட்டுவந்த பிரஜாஉரிமை தொடர்பான கட்டுப்பாடுகளினால் ரொஹிங்ய முஸ்லிம்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். மனித உரிமைகள் தொடர்பான பல சர்வதேச அமைப்புக்கள் மியன்மாரில் இடம்பெற்று வருகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்குத் தொடர்ந்து கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. ஆனால் இவையெல்லாம் காலந்தாழ்த்தப்பட்ட கண்டனங்களாகவே உள்ளன.

2012இற்குப் பின்னதாகவே இவர்கள் மியன்மார் ஆட்சியாளரது ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராட ஆரம்பித்தனர். அவ்வகையில் ஓகஸ்ட் 25ஆந் திகதியன்று மியன்மாரின் படைகளுக்கும் ரொஹிங்கிய ஆயுதக்குழுவிற்குமிடையே (யுசயமயபெ சுழாநைெலய ளுயடஎயவழைெ யுசஅல) பெரும் மோதல் உருவானதன் தொடர்ச்சியாகவே அவர்களுக்கு எதிரான வன்முறைகள் தீவிரமடைந்தன. அதாவது இவ்வாயுதக்குழுவினர் காவல்நிலையங்களைத் தாக்கியதன் பின்னணியிலேயே இக்கலவரம் வெடித்தது. மியன்மாரினது ஆட்சியாளர்கள் அங்கு நடைபெற்று வருகின்ற வன்முறைச் சம்பவங்களுடன் நேரடியாகவும் சில இடங்களில் மறைமுகமாகவும் தொடர்புபட்டிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. மியன்மாரினது ஆட்சியாளருக்கு பிறநாடுகளின் ஆதரவு இருப்பதன் பின்னணியிலேதான் இத்தகைய இனச் சுத்தீகரிப்பு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகின்றனரா என்ற சந்தேகங்களும் எழுகின்றன. குறிப்பாக ரஷ்யா, சீனா, இஸ்ரேல் போன்றவற்றினது ஆதரவினை அதனது ஆட்சியாளர்கள் கொண்டுள்ளனர். இவர்கள் ஒரு குழுவாக வாழ முடியாத அளவிற்கு இவர்களது வாழ்வியலை அழிக்கின்ற நடவடிக்கைகளை அரசியல் சக்திகளும் மதவாத அமைப்புக்களும் மேற்கொண்டு வருகின்றன. இது அந்நாட்டில் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து மியன்மாருக்கு வந்த யாவர்மீதும் காலாகாலமாகத் தொடர்ந்துவந்த இந்திய எதிர்ப்பு இனவாத அரசியல் வரலாறானது இதற்குப் பின்புலமாக அமைந்திருந்தது. (செந்தில்நாதன்,ஆழி.2013)

**ஆங் சான் சூயி**

ஆங் சான் சூயி மியன்மாரினது முக்கிய பொறுப்பக்களிலொன்றான மாநில ஆலோசகராக (State Counsellor) இருந்து வருகின்றார். அவர் தனது இராணுவத்தினை மேற்குறித்த விடயமாகக் குறைகூறுவதனை மறுத்து வருகின்றார். இராணுவ ஆட்சியானது மியன்மாரில் நிறைவடைந்து அங்கே பொதுத்தேர்தல் நடைபெற்றபோது அவர் தனது கட்சி சார்பாக அத்தேர்தலில் ஒரு முஸ்லீமைக்கூட நிறுத்தவில்லையென்பது இவ்விடத்தில் நோக்கத்தக்கது. எனவே அச்சமயத்திலிருந்தே ஆங் சான் சூயியினது முஸ்லிம்கள்மீதான வெறுப்பரசியலானது ஆரம்பித்திருந்தமையினை இதன் மூலமாக

உணரமுடிகின்றது. ஆனால் அவரில் நம்பிக்கைகொண்ட அந்நாட்டில் வாழ்ந்த சிறுபான்மை மக்களது வாக்குகளெல்லாம் அவருக்கே விழுந்தன. ஆனால் இறுதியில் சூயி பௌத்த அடிப்படைவாதிகளிடம் சரணடைந்துவிட்டாரென்பதே உண்மை.

ஆங் சான் சூயி இராணுவ ஆட்சியினை மியன்மாரிலிருந்து அகற்றி அந்நாட்டில் மக்களாட்சியினை உருவாக்கப் போராடியவர். இதனால் இவர் தனது அரசியல் வரலாற்றில் ஏறத்தாள 15 வருடங்களுக்கு மேல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர். நோபல் பரிசு, ஜவஹர்லால் அமைதிக்கான பரிசு உள்ளிட்ட மனித உரிமைகள் தொடர்பான விருதுகளையும் பெற்றவர். கனடா அவரைத் தனது நாட்டின் குடிமகளாக அறிவித்தது. பர்மாவின் தேசத் தந்தையான ஆங் சானின் மகள் என்பது இவருக்குள்ள மற்றொரு பெருமையாகும். இத்தகைய பெருமைக்குரிய சூயியின் நிர்வாகத்தில் மனித உரிமை என்பது ரொஹிங்ய முஸ்லிம் விடயத்தில் எப்போதும் வினாவாகவே இருந்து வந்துள்ளது. இவர் ஒரு புறம் தன்னை ஜனநாயகவாதியாக வெளியே காட்டிக்கொண்டு உள்ளே பெரும்பான்மை இனவாத அரசியல்வாதியாகவே செயற்படுவதாக இவர்மீது மியான்மார் மனித உரிமையாளரான மார்ங்சார்னி (Maung Zarni) என்பவர் குற்றம் சுமத்துகின்றார். அவ்வகையில் இவர் மியன்மாரில் இராணுவத்தினரும் மியன்மாரிலுள்ள அரசியல் கட்சிகளும் பௌத்த பிக்குகளும் புதிதாகத் தோன்றியுள்ள மதவெறி அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களுக்குப் பின்னால் சூயி இருப்பதாக மேலும் குற்றஞ்சாட்டுகின்றார்.

**ஐக்கிய நாடுகள் சபை**

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையினது கூட்டமானது 2017செப்ரெம்பர்28இல் கூடியபோது அதில் மியன்மாரில் நடைபெற்றுவருகின்ற வன்முறைகள் தொடர்பாகச் சில தீர்மானங்கள் இயற்றப்பட்டன. இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும். மனிதாபிமான உதவிகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். இறுதியாக நாட்டினைவிட்டுச் சென்றவர்கள் மீளவும் மியன்மாரில் குடியேறுவதற்குப் பாதுகாப்பு உள்ளிட்ட சில வசதிகளைச் செய்துகொடுத்தல் வேண்டும் என்பதாக அவை அமைந்திருந்தன. ஐ.நா செயலாளர் இவ்விடயமாகக் கூறுகின்றபோது இம்மக்களது நிலையானது உலகிலேயே வேகமாக அதிகரித்து வருகின்ற அகதிகள் நிலையாகவும் அவசர மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்ற நிலையாகவும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினையாகவும் மாறியிருப்பதாகக் கூறுகின்றார். (லத்தீப் பாரூக்,2017,ஒக்ரோபர்15) தொடர்ந்து அவர் கூறுகின்றபோது மக்களைப் பாதுகாக்க விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். அவர்களது துன்பங்கள் அகற்றப்படுதல் அவசியம், நாட்டில் உறுதியான தன்மையினை உருவாக்குதல் வேண்டும். தீர்வுகள் நீடித்த தன்மையாக இருத்தல் வேண்டும். தப்பிச் சென்ற பெண்கள், சிறுவர்களின் ஊடாக நாம் அவர்கள்பட்ட துன்பங்களைக் கேட்டறிந்துள்ளோம். இவை அங்கே பாரிய வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றமைக்கான ஆதாரங்களாக உள்ளன.

ரொஹிங்ய முஸ்லிம் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவ்வமைப்பிலுள்ள சீனா, ரஷ்யா என்பவை மியன்மாரின் ஆட்சியாளருக்குச் சார்பாக நடந்துகொள்ளுகின்றனரென்பதனைவிட அது எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் ஒவ்வொன்றும்கூட காலந்தாழ்த்தப்பட்ட நடவடிக்கைகளாகவும் உள்ளன. ஜோன் பிஷரது (John Bizer) அறிக்கையொன்றில் மியன்மாரில் இயங்கிவந்த ஐ.நாவின் பிரதிநிதி அந்த நாட்டு அரசுடன் இவர்களது உரிமைகள் தொடர்பாகப் பேசுவதனைத் தடுப்பதற்கு முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேலும் முன்னாள் ஐ.நா அதிகாரியொருவர் கூறுகின்றபோது ரொஹிங்ய முஸ்லிம்கள் வாழுகின்ற முக்கியமான பகுதிகளுக்கு மனித உரிமைகளின் அதிகாரிகள் செல்வதனைத் தடுக்க முயன்றார்

எனவும் கூறியுள்ளார். சுமார் 4 வருடங்களுக்கு முன்னதாக ஐ.நா சபையின் பிரிவொன்றிற்குப் பொறுப்பாக இருந்த ரெனாடா லொக டெஸாலியன் என்பவர் ரொஹிங்ய முஸ்லிம்கள் வாழுகின்ற பகுதிகளுக்கு மனித உரிமைகள் அதிகாரிகள் செல்வதனைத் தடுத்திருந்தார். இனஅழிப்பு நடைபெறப்போகின்றதென வழங்கப்பட்ட தகவல்களையும்கூட இவர் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. இப்படி மேலும் சிலரது அறிக்கைகள் ஐ.நா சபையினது அதிகாரிகளது நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளன.(லத்தீப் பாரூக் 2017ஒக்ரோபர்15)

மியன்மாரிலிருந்து தப்பிச் சென்ற பலரும் வன்முறைகளின்போது பல்வேறு விதமாகத் தாம் பெற்ற அனுபவங்களினை ஊடகங்களுக்குத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாகப் பலரும் ஆங் ˙சான் சூயியின் நடவடிக்கைகளை விமர்சிப்பவர்களாகவே உள்ளனர். அவரது நோக்கமானது தம்முடன் யுத்தம் புரிவதல்ல எனவும் தாங்கள் முகாம்களிலிருந்தோ அல்லது தப்பித்துச் செல்கின்ற வழியில் கடலில் மூழ்கியோ இறக்கட்டும் என்பதாக அங்கிருந்து தப்பிவந்த ஒருவரது சூயி பற்றிய கருத்தாக உள்ளது. மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் அதிகாரமிருந்தும் அவற்றினைப் பயன்படுத்தத் தவறிய இவர் வேடிக்கையினை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தார். வெறுமனே மியன்மார் அரசினைக் காப்பாற்றுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்ட இவர் பல இடங்களிலிருந்தும் வந்த அழுத்தத்தின் காரணத்தினால் தற்போது பொய் சொல்வதற்கும் தயங்கவில்லை. எடுத்துக்காட்டாக இனஅழிப்பு எவையும் இடம்பெறவில்லையெனக் கூறிய அவர் தொடர்ந்து நாட்டின் மேற்குப் பகுதியில் வன்முறைகள் எவையும் நடைபெறவில்லையென்ற கருத்தினையும் முன்வைத்தவர். பலர் பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளுக்குக் குறிப்பாக 5,00,000இற்கும் அதிகமானவர்கள் புலம் பெயர்ந்து சென்றதன் பின்னரும் அது தொடர்பான காட்சிகள் ஊடகங்களிலும் சற்றலைற் போன்ற தொழிநுட்பங்களின் வாயிலாக வெளிக்கொணரப்பட்ட பின்னரும் ஐ.நா உள்ளிட்ட அமைப்புக்கள் இனஅழிப்பானது அப்பகுதிகளில் இடம்பெறுகின்றதெனக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நிலையிலும் மேற்கூறப்பட்ட வகையில் அவரது கருத்து அமைந்திருந்தது. இந்நிலையில் மியன்மாரில் நடைபெற்று வருகின்ற ரொஹிங்யர்கள்மீதான அடக்கமுறைகளைக் கண்டித்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஆங் சான் சூயியினது பெயரினை அகற்ற வேண்டுமெனக்கோரி அப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

செப்ரெம்பர் 5ஆந் திகதிக்குப் பின்னர் கலவரங்கள் யாவும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாகவும் மக்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு விட்டதாகவும் மியன்மார் அரசு தெரிவித்தபோதும்கூட பங்களாதேஷ் மக்களில் பலர் தாம் தமது பகுதிகளில் இருந்து பார்த்தபோது எரிகின்ற கிராமங்களை அவதானித்ததாகத் தெரிவிக்கின்றனர்.(கஜமுகன்,ச.2017ஒக்ரோபர்29) அங்குள்ள முகநூல் நிறுவனும்கூட மியன்மார் அரசிற்குச் சாதகமான வகையில் நடப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ரொஹிங்ய முஸ்லிம்களது அவலத்தினைச் சித்தரிக்கின்ற புகைப்படங்கள் பல ஐரோப்பிய நாடுகள், மியன்மார் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் பதிவேற்றம் செய்யப்படாமல் அகற்றப்பட்டுள்ளன. அல்லது முடக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் மியன்மார் அரசினால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்படுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான அநாகரிகமான செயல்களாக உள்ளன.

**அகதிகளானவர்களது நிலை**

ஆரம்பத்தில் ஊடகங்களை வன்முறைகள் இடம்பெறுகின்ற பகுதிகளுக்கு உட்செல்வதற்கு அனுமதி வழங்காத சூயி தற்போது இராணுவத்துடன் மட்டுமே அவர்கள் குறிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லலாம் என்ற கருத்தினை முன்வைத்துள்ளார். தற்போது பங்களாதேஷ் அவர்களுக்குத் தன்னால்

அகதிகளுக்கான அந்தஸ்தினை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளது. உடனடியாக அவர்களைத் தமது நாட்டுக்குத் திரும்ப வேண்டுமெனவும் அது கூறியுள்ளது. இந்நிலையில் இரு நாட்டரசுகளாலும் துரத்தியடிக்கப்பட வேண்டிய நிலையில் மியன்மார் அகதிகள் இன்று உள்ளனர். அதுமட்டுன்றித் தங்களது மக்களையும்கூட ரொஹிங்ய மக்களுக்கு உதவி செய்வதில் பல கட்டுப்பாடுகளையும் பங்களாதேஷ் அரசாங்கம் விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் அகதிகளாகச் செல்கின்றபோது வழியில் மாண்டவர்களைத் தவிர பங்களாதேஷில் காணப்படுகின்ற முகாம்களிலும் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் கூட இத்தகைய முகாம்களில் சரியான முறையில் அகதிகளுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. பல குழந்தைகள் பெற்றோரை இழந்த நிலையில் காணப்படுகின்றனர். தமது நாட்டுக்குத் திரும்பிச்செல்கின்றவரை வெளியில் நடமாடவும் அவர்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷில் உள்ள அகதிமுகாம்களில் காணப்படுகின்ற சிறுவர்கள் அனைவரும் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருப்பதாக யுனஸ்கோ அமைப்பும் கவலை தெரிவித்திருந்தது. இங்குள்ள சிறுவர்களது எண்ணிக்கையானது 3,00,000இற்கும் அதிகமென்பது கவனிக்கத்தக்கது. தொடர்ந்து யுனஸ்கோ வெளியிட்டுள்ள அறிக்கையில் அகதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர், உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். சுத்தமான சிறுவர்களுக்கான உதவிகள் எவையும் கிடைப்பதில்லை. அவர்கள் இந்த இடத்தினை நரகமாகவே கருதுகின்றனர். யுனஸ்கோ அவர்களைப் பாதுகாக்கின்ற முயற்சியில் இறங்கியுள்ளது. அகதிகளுக்கு உதவி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை 434 மில்லியன் டொலரினைத் திரட்டி வருகின்றது. இவற்றில் ஆறிலொரு பங்கு இங்குள்ள சிறுவர்களுக்காகப் பயன்படுத்தப்படுமெனத் தொடர்ந்து அது கூறியிருந்தது.

ஏற்கனவே பங்களாதேஷ் நாட்டுடன் மியன்மார் செய்திருந்த உடன்பாட்டின் பிரகாரம் குறிக்கப்பட்ட சில அகதிகளை மீளவும் தமது நாட்டிற்குத் திருப்பியழைப்பதற்குச் சம்மதத்தினைத் தெரிவித் திருந்தபோதும் அதற்கும் சில கட்டுப்பாடுகளை அவர் விதித்துள்ளனர். அதாவது அவர்கள் தமது பகுதிகளில் குடியேறுவதற்கு அப்பகுதியில் அவர்கள் நீண்டகாலமாக வாழ்ந்தமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதே அது. இது பிரச்சினைக்குரிய ஒன்று. காரணம் அவை இடம்பெயர்ந்து செல்கின்ற சமயங்களில் தொலைந்திருக்கலாம் அல்லது அவர்கள் புலம் பெயர்ந்தமையின் பின்னராக அவர்களது வீடுகளை உள்ளூர் வாசிகள் கொள்ளையிட்ட சமயத்திலோ, எரியூட்டப்பட்டபோதோ அழிந்து போயிருக்கலாம்.

நாட்டினைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்ற ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு புகலிடம் கொடுப்பதற்குத் தென்கிழக்காசிய நாடுகளில் அனேக நாடுகள் இஸ்லாமியர்களை அதிகளவில் கொண்டுள்ள நாடுகளாக இருந்தும் சில நாடுகளில் ரொஹிங்ய முஸ்லிம்களே அதிகளவில் காணப்படுகின்றபோதும் அவை முன்வரவில்லை. இந்நிலையில் மியன்மார் அரசானது அகதிகளைத் திருப்பி அழைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக ஆங் சான் சூயி தெரிவித்தபோதும் அவரது கருத்துக்கு முரண்பட்ட வகையில் பங்களாதேஷிற்குச் செல்லுகின்ற அகதிகளது எண்ணிக்கையானது அதிகரித்துக்கொண்டு செல்கின்றதென்ற கருத்தினைச் சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டன. அதேநேரத்தில் வறுமைப்பட்ட அந்நாடானது அவர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்துகொடுக்க முடியாமல் பொருளாதார நெருக்கடியில் தள்ளாடி வருகின்றது. இந்நிலையில் பங்களாதேஷிற்கும் மியன்மாருக்குமிடையிலே அகதிகளைத் திருப்பியழைப்பது தொடர்பாக உடன்பாடொன்று இரண்டு மாதங்களில் இவர்கள் திரும்பும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உண்மையில் மியன்மார் நாட்டினைப் பார்த்தால் அங்கு நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்களுடன் அந்நாட்டு அரசு தொடர்பில்லாத நிலைபோன்று தெரிந்தாலும் இச்சம்பவங்களை ஏனையவர்களை வைத்து அரசு திட்டமிட்டுச் செய்வதாகக் கூறப்படுகின்றது. மதக்கலவரங்கள் உருவாவதற்கான சூழலை உருவாக்கி அவர்கள்மீதான தாக்குதல்களை அது அதிகரித்து வந்தது. அவர்களது பிறப்பு வீதத்தினைக் கட்டுப்படுத்த முற்பட்டது. அகதிகளாகத் தப்பி ஓடுவதற்கான சூழலை ஏற்படுத்துதல் அவ்வாறு செல்வோர்மீது தாக்குதல் மேற்கொள்ளுதல் இவையெல்லாவற்றிலும் அரசின் பங்கானது குறிப்பிடத்தக்க வகையில் உள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மதக்கலவரம் நடந்தாலும் அக்கலவரம் வகுப்புவாதக் கலவரமாகவும் பார்க்கப்படுதல் வேண்டும். மெய்க்திலா (Meilktila) என்ற இடத்தில் முஸ்லிம்களது வியாபார நிறுவனங்கள் கொள்ளையிடப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. இதனைப் பொதுமக்கள். மேற்கொள்ள இராணுவமும் காவல்துறையும் வேடிக்கை பார்த்து நின்றன.

மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்களின் பகுதிகளிலொன்றான ராக்கைனில் 5 பாரிய மனிதக் குழிகள் காணப்படுவதாக ஏ.பி. செய்தி முகவராண்மை வெளியிட்டுள்ள புலனாய்வுச் செய்தியொன்று கூறுகின்றது. இவ்வறிக்கையில் இத்தாக்குதல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களிடமிருந்து தாக்குதல்களின் பின்னர் எடுக்கப்பட்ட காணொளிகள் இணைக்கப்பட்டுள்ளன. சுமார் 400பேர்கள் இவற்றில் புதைக்கப்பட்டிருக்கலாமெனவும் அது கூறுகின்றது. ஆனால் இதனை மறுக்கின்ற மியன்மார் அரசு ஒரேயொரு மனிதப் புதைகுழிதான் இருப்பதாகவும் அதில் 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டதாகவும் கூறிவருகின்றது.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை அவை மியன்மாரினைத் தமது சந்தைகளாக வைத்திருப்பதற்கே விரும்புவதனால் அவை அங்கே மீறப்படுகின்ற மனித உரிமைகளைத் தட்டிக்கேட்பதில் தயக்கம் காட்டுகின்றன. இதனாலோ என்னவோ சர்வதேச சமூகங்கள் அங்கே நடப்பவை இனப்படுகொலை எனக் கூறுவதில் பின்நிற்கின்றன. தற்போதைய நிலையில் ஐ.நாவின் தலையீடு மியன்மார் பொறுத்து சற்றுத் தீவிரமானதாக இருந்தாலும் அதனது வேகம் மந்தமாகவே உள்ளது. இவ்விடயமாக அமெரிக்காவும் மியன்மாரினது நடவடிக்கைகளைப் பகிரங்கமான முறையில் கண்டனம் செய்ய ஆரம்பித்துள்ளது. அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான நியாயமான விசாரணை தேவையென அது கூறியுள்ளது. அதேநேரத்தில் அந்நாட்டின்மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு இது தக்க நேரமில்லை என்பதனையும் அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் (Rex W.Tillerson) தெரிவித்திருந்தார். இவர் மியன்மார் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டு ரொஹிங்ய முஸ்லிம்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், இராணுவம், ஆட்சியாளர் உள்ளிட்ட பலரையும் சந்தித்த பின்னர் இத்தகைய அறிக்கையினை வெளியிட்டிருந்தார். மணிலாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டிற்குச் சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தொனியா குட்ரேரஸ் (Antonio Guterres) அங்கு ஆங் சான் சூயியினைச் சந்தித்து அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவதனை உறுதிப்படுத்துமாறு கேட்டிருந்தார்.

2018இன் தொடக்கத்தில் பங்களாதேசுடன் மியன்மார் அரசு அகதிகள் தொடர்பான உடன்பாடொன்றில் கைச்சாத்திட்டது. அதன்படி பங்களாதேசில் தப்பிச்சென்று தஞ்சமடைந்துள்ள ரொஹிங்யர்களை இரண்டு வருடங்களுக்குள் திருப்பி அழைப்பதற்கு மியன்மார் அரசு சம்மதித்துள்ளமை வரவேற்கத்தக்கதே. இந்நிலையில் ஜனவரி மாத இறுதியில் முதற்குழு திருப்பி அனுப்பப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சூழலில் அது தொடர்பான விபரங்கள் தெளிவற்றதாக இருப்பதாக விமர்சகர்கள் தெரிவித்திருந்தனர். இது தொடர்பாக ஐக்கிய

நாடுகள் சபையின் முகவரமைப்புக்கள் மற்றும் மனிதாபிமானக் குழுக்கள் மத்தியிலும் சந்தேகங்கள் தோன்றியுள்ளன. அகதிகள் தமது விருப்பத்திற்கு முரணாகப் பலவந்தமாகத் திருப்பியனுப்பப்படுகின்றனரா என்ற தெளிவற்ற நிலை இருப்பதாக மனித உரிமைகளுக்கான குழுக்கள் தெரிவித்தன. ஐ.நாவின் செயலாளரும் மேற்குறித்த விடயந் தொடர்பான விளக்கத்தினை நாடியிருந்தார். சர்வதேச மன்னிப்புச்சபையும்கூட இவர்களைத் திருப்பியனுப்புவதனை முன்முதிர்ச்சியற்ற செயல் எனக்கூறியது. மேலும் சர்வதேச தரத்திற்கு ஏற்றபடி இந்த நடவடிக்கை நடைபெறுவதனை ஐ.நா. உத்தரவாதப்படுத்துவதென்பதும் சிரமமான செயலாகுமென்ற கருத்தும் நிலவுகின்றது.

2018இன் தொடக்கத்தில் ரொஹிங்ய மக்கள் பிரச்சினை தொடர்பாக ஆங் சான் சூயிக்கு ஆலோசனை வழங்குவதற்கு உருவாக்கப்பட்டிருந்த சர்வதேச குழுவிலிருந்து அமெரிக்க இராஜதந்திரியான பில்றிச்சட்சன் (Bill Richardson) விலகியிருந்தார். இக்குழு ஒரு பூசி மெழுகும் குழுவெனவும் அம்மக்களது பிரச்சினை குறித்து போதுமான நியாயமான தலைமைத்துவத்தினை சூயி கொண்டிருக்கவில்லையென்ற குற்றச்சாட்டினையும் முன்வைத்துள்ளார். அதேநேரத்தில் ரொஹிங்ய மக்களது பிரச்சினைகள் தொடர்பாகவும் அகதிகளைத் திருப்பியழைப்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்ற இச்சூழலில் ரொஹிங்ய ஆயுதக்குழுக்களது அந்நாட்டு இராணுவத்திற்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளும் தொடர்வதால் பேச்சுவார்த்தையில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

இது இவ்வாறிருக்க மிகவும் அண்மையில் அதாவது 2018 மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் முகவர் நிலையத்தின் பிரதான அதிகாரியான உதவிச் செயலாளர் அன்றூ கில்மோர் மியன்மார் அரசானது ராக்கைன் பிரதேசத்தில் தற்போதும் இனச்சுத்தீகரிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். பிரச்சினை உச்சநிலையினை அடைந்து 6 மாதங்கள் கடந்த நிலையிலும் தொடர்ந்தும் இவ்விடயந் தொடர்பான மதீப்பீட்டினை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டு வருகின்றது. அங்கே கடந்த வருடத்தில் குருதி சிந்த வைத்த படுகொலைகள், பாலியல் வன்புணர்வுகள் ஆகியன இடம்பெற்ற நிலையானது தற்போது தீவிரவாதத்திற்கு எதிரான தாழ்ந்த மட்ட மட்ட நடவடிக்கைகள், பட்டினி போடுதல் போன்றவற்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தொடர்ந்து தனது கருத்தினை அவர் தெரிவித்துள்ளார். உண்மையில் இவையெல்லாம் அந்நாட்டினது உள்நாட்டுப் பிரச்சினையினை பெரிதுபடுத்துமே தவிர தீர்வாக அமையாது.

**முடிவுரை**

இன்றளவில் மியன்மாரில் நடந்தேறியமை ரொஹிங்யர்களுக்கெதிரான வன்முறைகள். இதில் அந்நாட்டின் அரசியல்வாதிகள் பலரும் மதவாதிகள் சிலருக்கும், அந்நாட்டு இராணுவத்திற்கும் நேரடியாகத் தொடர்புள்ளதென்பதனை எவரும் மறுக்க முடியாது. கலவரங்கள் நடக்கின்றன என்பதனை ஏற்றுக்கொள்ளுகின்ற ஆங் சான் சூயிகூட அங்கு இனச்சுத்தீகரிப்பு நடப்பதனை மறுக்கின்றார். ஐக்கிய நாடுகள் சபை இவ்விடயமாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை பாராட்டக்கூடிய விடயமாயினும் அதுவும் மியன்மார் அரசிற்குச் சாதகமான சில வல்லரசுகளின பிடியில் இருப்பதும் நியாயமான தீர்வு ரொஹிங்ய மக்களுக்குக் கிடைக்குமா என்ற சந்தேகங்களும் உள்ளன. மியன்மாரினைப் பொறுத்தவரை அந்நாட்டினது மதவாத அரசியல் மாற்றப்படுதல் அவசியம். அதேநேரத்தில் அந்நாட்டில் பல்லின அரசொன்று அமையுமிடத்திலேதான் ஜனநாயகத்தினை அந்நாட்டில் ஓரளவிற்காவது எதிர்பார்க்க முடியும். ருவாண்டாவினது விடயத்தில் தலையிட்டது போன்று மியன்மார் விடயத்திலும் ஐ.நா சரியான முடிவினை எடுத்து அம்மக்களைக் காப்பாற்ற முன்வருதல்

வேண்டும். ஏனெனில் முழு முஸ்லிம் மக்களையும் மியன்மாரினைவிட்டு விரட்டுகின்ற அந்நாட்டு அரசினது நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளியினை வைத்தல் வேண்டும். சுமார் 50 வருடங்களுக்கும் அதிகமாக இருண்ட தேசமாக விளங்கிய மியன்மார் தன்னை வளம்படுத்துவதில் அக்கறையினைச் செலுத்த வேண்டுமே தவிர இன ஒழிப்பில் ஈடுபடுமானால் தனது முன்னைய நிலையினையே அது அடையுமென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லையெனலாம். ஆயுதப்போராட்டமாக மாறியுள்ள ரொஹிங்ய மக்களது போராட்ட வடிவமானது இறுதியில் நாட்டினை அழிவான நிலைக்கே இட்டுச் செல்லும்.

**உசாத்துணை நூல்கள்**

**நூல்கள்**

தியாகராஜ், க.ம. (2009), பர்மா மண்,மக்கள்,மதம், அடையாளம் வெளியீடு, இந்தியா.

ஹோல்,D.G.E.(1971), தென்கிழக்கு ஆசிய வரலாறு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

DesaiW.S. (1961), A Pageant of Burmese History, Orient Longmans, New Delhi.

Hall,D.G.E. (1968), Early English Intercourse with Burma 1587-1743, Frank Cass & Co.

Louis Allen. (1934), Burma - The largest war, 1941-1945, Phoenix giant.

Trager,N. (1966), Burma from Kingdom to Republic, Pall Mall Press, London.

**பத்திரிகைகள்**

உதயன், நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

தினக்குரல், ஏசியா மீடியா பப்ளிகேஷன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

தினகரன், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

தினகரன், சண் குழுமம், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

தினத்தந்தி, தினத்தந்தி வெளியீடு, திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

தினமலர், சண் குழுமம், திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.

வலம்புரி, வலம்புரி அசோசியேசன் ஸ்தாபனம், யாழ்ப்பாணம்.

வீரகேசரி, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.